**தமிழ்நாடு கலைத்திட்ட வடிவமைப்பு 2025**

**பரிந்துரைக்கப்பட்ட வரைவுப் பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகள்**

**வகுப்பு – 1-5 – தமிழ்**

தமிழ்நாடு, மாநிலக் கல்விக் கொள்கை 2025, மாறிவரும் உலகின் தேவைகளுக்கேற்ப மொழிக்கல்வி அமைவதை வலியுறுத்துகிறது. தொன்மையும் இலக்கிய, இலக்கணச் செறிவுமுடைய தமிழ்மொழிக் கல்வி, பிற பாடங்களையும் கற்க அடித்தளமாக அமைய இத்தொடக்கநிலைப் பாடத்திட்டம் வழிகாட்டுகிறது. தொடர்ந்து, ஒவ்வொரு குழந்தையும் தன்னம்பிக்கையுடன் அன்றாட வாழ்வில் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளவும் எழுத்துகளை அறிந்து படிப்பதில் தொடங்கி, நூல்களை விரும்பிப் படிப்பதாக மேம்படவும் தம் எண்ணங்களைக் கலை, அழகியல் உணர்வுகளோடு படைப்பாற்றலாக வெளிப்படுத்தவும் வாய்ப்பளிக்கிறது; தாம் வாழும் சூழலுக்கு ஏற்பப் பொருள்படவும் திறம்படவும் மொழியைப் பயன்படுத்தும் திறன் பெறுதலை இப்பாடத்திட்டம் உறுதிசெய்கிறது.

| **கற்றல் இலக்கு 1 – கற்றலுக்கு முன் ஆயத்தம் பெறுதல் (பார்த்தல், கேட்டல், உணர்தல், நுண்தசைப் பயிற்சி, உடலியக்கச் செயல்கள்)** | | | |
|---|---|---|---|
| **திறன் பகுதி** | **திறன்** | **கற்றல் விளைவுகள்** | |
| | | **முதல் வகுப்பு** | **இரண்டாம் வகுப்பு** |
| **முன் ஆயத்தம்** | 1.1<br>மொழியைக் **கற்றலுக்கான முன் ஆயத்தம்** பெறுதல் | குழந்தைகள்,<br>• சுற்றுப்புறத்தில் கேட்கும் பல்வேறு ஒலிகளை அடையாளம் காணுவர். போலச் செய்வர். பிரித்தறிந்து வெளிப்படுத்துவர். மணம், சுவை உணர்ந்து விருப்பம், தேவை போன்ற உணர்வுகளைப் பேச்சில் வெளிப்படுத்துவர். *(மனிதர்கள், விலங்குகள், பறவைகள், வாகனங்கள், இசைக்கருவிகள் போன்றவற்றின் ஒலிகள், கைதட்டுதல், ஒலி எழுப்புதல், மழை பெய்தல், இன்னபிற.,)*<br>• தெரிந்த சொற்களைக் கொண்ட எளிய இசைப் பாடல்களைக் கேட்டும் பார்த்தும் (ஊடகம்) உணர்ந்து கைதட்டி, உடலை அசைத்தும் தலையை ஆட்டியும் பாடி ஆடி மகிழ்வர்; இணைந்து பாடுவர். *(இசை, பாடல், போலச்செய்தல் - பூனை, நாய் போல நடத்தல், கவனக்குவிப்பு விளையாட்டுகள்)*<br>• தாள் ஒட்டுதல், பொம்மைகள் செய்தல் போன்றவை மூலம் கைவினைச் செயல்பாடுகளை மேற்கொண்டு நுண்தசைப் பயிற்சி பெறுவர். பல்வேறு விளையாட்டுகள் மூலம் கவனத்தை ஒருமுகப்படுத்தும் திறன் பெறுவர். *(தாள், பஞ்சு, பொட்டு, துணிகளை மடித்தும் ஒட்டியும் மாவு, மண்ணைப் பிசைந்தும் உருவங்கள் செய்தல், தாள்பந்து உருவாக்குதல், கயிற்றில் முடிச்சு போடுதல், மணிகளைக் கோத்தல், விரல் அச்சு வைத்தல், தானியங்கள், விதை, கொட்டை, இலை, சருகு, காய், குச்சி, பழத்தோலில் உருவங்கள் செய்தல் போன்றவை)* | குழந்தைகள்,<br>பாடல், கதைகளைக் கேட்டும் பாடியும் சுவைத்தும் கற்றலுக்கு ஆயத்தம் பெறுவர். அறிந்த எழுத்துகளை நினைவுகூர்ந்து கற்றலுக்கு ஆயத்தமாவர். களிமண், மாவு பயன்படுத்தி எழுத்து உருவங்களையும் எளிய உருவங்களையும் உருவாக்குவர். படம் வரைவர். வண்ணம் தீட்டுவர். |

TNSCERT - DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| கற்றல் இலக்கு 2– | **சூழலுக்கு ஏற்ப இயல்பாகவும் சரளமாகவும் மொழியைப் புரிந்து பயன்படுத்துதல். (கேட்டல், பேசுதல்)** | | |
| **கேட்டல், பேசுதல்** | 2.1<br>பாடலைக் கேட்டுப் பாடுதல், நீட்டித்தல், உருவாக்குதல். | • எளிய ஒத்த ஓசை உடைய பாடல்களைக் கேட்டுப் பாடுவர். சுவைப்பர். (ஊடகம், வாய்மொழி வாயிலாக) பாடல் அமைப்பைப் புரிந்துகொண்டு ஒரு சொல்லை மட்டும் மாற்றிச் சொந்தநடையில் உருவாக்கிப் பாட முயற்சி செய்வர். (வாய்மொழியாக)<br><br>(*எ.கா. புதிய புதிய பொம்மை பார்*<br>*கையை ஆட்டும் பொம்மை பார்*<br>*-------------------------- பொம்மை பார்!)* | • புதிய சொற்களைக் கொண்ட எளிய இசைப் பாடல்களைக் கேட்டும் பார்த்தும் உணர்ந்தும் பாடியும் ஆடியும் சுவைத்தும் மகிழ்வர். (ஊடகம், வாய்மொழி வாயிலாக) குழுவுடன் இணைந்து பாடுவர். பாடல் அமைப்பை மாற்றாமல் பொருள்/ பாத்திரங்களை மாற்றித் தொடர்ந்து உருவாக்கிப் பாடுவர். (வாய்மொழியாக)<br>*(எ.கா. பாட்டுப் பாடும் காட்டுக் குயிலே*<br>*என்னருகில் வா வா*<br>*உன்னைப் போலப் பாட்டுப் பாட*<br>*எனக்குச் சொல்லித் தா தா)* |
| | 2.2.<br>சொந்தநடையில் **உணர்வு வெளிப்பட** பேசுதல். தாமே உருவாக்கிக் கூறுதல். | • எளிய படக்கதைகளைப் பார்த்தும் கேட்டும் புரிந்துகொண்டு சொந்த மொழிநடையில் கூறுவர் / முயற்சி செய்வர்.<br>*(எளிய படக்கதை, விடுகதை)* | எளிய கதைகளைக் கேட்டுப் புரிந்துகொண்டு கதை மாந்தர், கதைக்கருத்து குறித்துச் சொந்த மொழிநடையில் கோவையாகக் கூறுவர். போலச் செய்வர். பறவை, விலங்கு, மனிதர்கள், கதைப்பாத்திரங்கள் போல முகமூடி அணிந்து / விரல் பொம்மை அணிந்து பேசி நடித்துக்காட்டுவர்.<br>*(எளிய கதை, விடுகதை)* |
| | 2.3.<br>கேட்டும் பார்த்தும் புரிந்துகொள்ளுதல், பயன்படுத்துதல். (சூழல் சார்ந்த சொற்கள், புதிய சொற்கள், கலைச்சொற்கள், வருணனை, அறிவிப்பு, விதிமுறைகள், விளம்பரங்கள்) | • வாய்மொழி வழிகாட்டல், அறிவிப்பு, விதிமுறைகளைக் கேட்டுப் புரிந்துகொண்டு செயல்படுவர். படம் பார்த்துப் பேசுவர்.<br>*(எ.கா. சிந்தாமல் உண்.*<br>*அடிக்கடி தண்ணீர் குடி.)* | வாய்மொழி வழிகாட்டல், அறிவிப்பு, விதிமுறைகளைக் கேட்டுப் புரிந்துகொண்டு செயல்படுவர். படம் பார்த்துத் தன் அனுபவத்தோடு இணைத்துப் பேசுவர்.<br>*(எ.கா. தரை ஈரமாக உள்ளது; வழுக்கும்; ஓடாமல் மெதுவாக நட.)* |
| | 2.4.<br>கேட்டுப் புரிந்துகொண்டு **எதிர்வினையாற்றுதல், பங்கேற்றல்.** (உரையாடல், கலந்துரையாடல்) | • எளிய உரையாடலைக் கேட்டுப் புரிந்துகொள்வர்; உரையாடல், கலந்துரையாடலில் ஈடுபடுவர். கருத்து கூற முயற்சி செய்வர். | உரையாடலைக் கேட்டுப் புரிந்துகொள்வர்; உரையாடல், கலந்துரையாடலில் ஈடுபட்டுத் தம் கருத்தை வெளிப்படுத்துவர். |
| | 2.5<br>தலைப்பு சார்ந்து பேசுதல். | • சொந்த மொழிநடையில் பேசுவர்.<br>*(தான், நண்பர், குடும்பம், பிடித்தவை, பிடிக்காதவை குறித்து)* | சொந்த மொழிநடையில் தயக்கமின்றிக் கோவையாகப் பேசுவர். (*தான், பள்ளி, வளர்ப்பு விலங்குகள் போன்றவை குறித்து*) |

TNSCERT - DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | 2.6 வினாக்களுக்கு விடை கூறுதல், வினா கேட்டல். | • வினாக்களைப் புரிந்துகொண்டு ஓரிரு சொற்களில் விடை கூறுவர்,<br>• அறிந்துகொள்வதற்காக எளிய வினாக்களைக் கேட்பர். | • வினாக்களைப் புரிந்துகொண்டு எளிய தொடர்களைப் பயன்படுத்தி விடை கூறுவர்,<br>• கருத்து விளக்கம் பெற வினாக்களைக் கேட்பர். |
| **கற்றல் இலக்கு 3** | **படித்தலுக்கு ஆயத்தம் பெறுதல்: சரளமாகவும் பொருள் புரிந்தும் படித்தல்.** | | |
| | **திறன்** | **கற்றல் விளைவுகள்** | |
| | | **முதல் வகுப்பு** | **இரண்டாம் வகுப்பு** |
| **படித்தல்** | 3.1<br>படித்தலுக்கான ஆயத்தம் பெறுதல். | படம், குறியீடு, வடிவங்களை உற்றுநோக்கியும் ஒப்பிட்டும் ஒற்றுமை, வேற்றுமை காண்பர். இடமிருந்து வலமாகப் படித்தலுக்கான முன்பழகு செயல்களில் ஈடுபடுவர். (*எ.கா. படங்களைக் கோடிட்டு இணைத்தும் தொட்டுக்காட்டியும் கதை நிகழ்வுகளை இடமிருந்து வலமாகக் கூறுவர். வரிவடிவத்தை அடையாளம் காண்பதற்கான முன்பழகு செயல்களில் ஈடுபடுவர்.*) | முன்பு கற்ற எழுத்துகளைச் சொற்களில் நினைவு கூர்வர். (*படங்களை இணைத்துப் பொருளின் பெயரைக் கூறுவர். படங்களைச் சொற்களுடன் பொருத்துவர்.*) |
| | 3.2<br>எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலித்தல், பயன்படுத்துதல். | தமிழ் எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலிப்பர். (*பாடல், படக்கதை, சொல்*) | தமிழ் எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலிப்பர். குறில், நெடில் வேறுபாட்டுடன் படித்துக் காட்டுவர். பிறமொழி ஒலிப்புகளுக்கான எழுத்துகளை அறிந்து படிப்பர். |
| | 3.3<br>படித்துப் புரிந்துகொள்ளுதல். | எழுத்துகளை இணைத்துச் சொற்களைப் படிப்பர். படங்களைப் பார்த்துச் சொற்களின் பொருள் புரிந்துகொள்வர்.<br><br>(*எழுத்துக்கோவைகள், ஒத்த ஓசைச் சொற்கள், ஈரெழுத்துச் சொற்கள், எளிய சொற்கள், இருசொல் தொடர்கள், படக்கதை, சுவைகள், வண்ணங்கள், விலங்குகள், கிழமைகள் போன்ற பெயர்கள்*) | பொருள்புரிந்து படிப்பர். நகைச்சுவைப் படங்கள் / புதிர்ப்படங்களைப் பார்த்து மகிழ்வர்/ விடை கண்டறிவர்.<br><br>(*அன்றாட வாழ்வியல் தொடர்பான சொற்கள், சிறு தொடர்கள், படக்கதை, சிறு நிகழ்வு, திசை, வாகனங்களின் பெயர்கள், தமிழ் & ஆங்கில மாதங்களின் பெயர்கள், உறவுகளின் பெயர்கள்*) |
| | 3.4<br>நிறுத்தக் குறிகளுக்கு ஏற்ப **ஏற்ற இறக்கங்களுடன்**<br>உரைப்பகுதியைப் படித்தல். | படக்கதையில் உள்ள எளிய சொற்களைப் படிக்க முயற்சி செய்வர். | சிறுசிறு தொடர்களை நிறுத்தக்குறிகளுக்கு ஏற்பப் படிப்பர். (*முற்றுப்புள்ளி*) |
| | 3.5<br>விரும்பும் நூல்களைத் தேடிப் படித்தல்: **சுவைபட** எடுத்துக்கூறுதல், | எளிய படக்கதைகளைப் படிக்கக் கேட்பர். தாமும் அதுபோலப் படிக்க முயற்சி செய்வர். | எளிய படக்கதைகளைப் படித்துக்காட்டுவர்: சுவைபட எடுத்துக்கூறுவர். |

TNSCERT-DRAFT SYLLABUS

| கற்றல் இலக்கு 4 எழுதுவதற்கு ஆயத்தம் பெறுதல்: இயல்பாகவும் சரளமாகவும் சொந்த நடையிலும் எழுதுதல். | | | |
|---|---|---|---|
| | திறன் | கற்றல் விளைவுகள் | |
| | | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு |
| எழுதுதல் | 4.1<br>நுண்தசைப் பயிற்சி, உடலியக்கச் செயல்பாடுகள், கண், கை ஒருங்கிணைவு மூலம் எழுதுவதற்கான ஆயத்தம் பெறுதல். | நுண்தசைப் பயிற்சியில் ஈடுபடுவர்; கண், கை ஒருங்கிணைவு பெறுவர்.<br>*(கிறுக்குதல் (With and Without limit), வண்ணமடித்தல் (With and Without limit), புள்ளிகளை இணைத்தல், வளைகோடு, நேர்கோடு, சாய்வுக்கோடு, வடிவங்களை வரியொற்றியும் இல்லாமலும் வரைதல் (Tracing and Writing)* | நுண்தசைப் பயிற்சிக்கான வகுப்பறை விளையாட்டுகளில் ஈடுபடுவர். கற்ற எழுத்துகளைக் கேட்டு காற்றில், கரும்பலகையில் எழுதுவர்.<br>*(வடிவ அமைப்பைப் பின்பற்றி தொடர்ந்து வரும் வடிவத்தை வரைவர். முறையான கையெழுத்தில் எழுதுவர். அச்செழுத்துகளுடன் ஒப்பிட்டுத் திருத்தம் செய்வர்.)* |
| | 4.2<br>எழுதும் முறை அறிந்து வரியொற்றி, பார்த்தும் கேட்டும் எழுதுதல். (எழுத்துகள், சொற்கள், தொடர்கள்) | எழுதும் முறை அறிந்து எழுதுவர். எழுத்துகளை வரியொற்றி எழுதுவர். எழுத்துகள், சொற்களைப் பார்த்து எழுதுவர்; சொல்லக்கேட்டு எழுத்துகள், சொற்களை ஒலித்துக்கொண்டே எழுதுவர். தன் பெயரை எழுதுவர். | சொற்கள், சிறு தொடர்களைப் பார்த்து எழுதுவர்; நினைவுகூர்ந்து முறையாக எழுதுவர். சொல்லக்கேட்டு எழுத்துகள், சொற்கள், சிறு தொடர்களை விரைவாக எழுதுவர்.<br>*(படங்களில் மறைந்திருக்கும் எழுத்து வடிவங்களைக் கண்டறிந்து வண்ணம் தீட்டுவர்.)* |
| | 4.3<br>பார்த்த, கேட்ட, படித்த பகுதிகளின் பொருள்புரிந்து விடை எழுதுதல். | படத்திற்குரிய சொற்களில் கற்ற எழுத்துகளை நினைவுகூர்ந்து இணைப்பர். நிரப்புவர். எழுதுவர். | கற்ற, தெரிந்த சொற்களின்/ எளிய தொடர்களின் பொருள்புரிந்து விடையளிப்பர். வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை எழுதுவர். |
| | 4.4<br>சொந்தக் கருத்தைப் பல்வேறு வடிவங்களில் **விவரித்து, வருணித்து, ஒப்பிட்டு** எழுதுதல். | சிறு சொற்களில் கருத்தை வெளிப்படுத்துவர்.<br>(*படம் பார்த்துப் பெயர் எழுதுவர்.*) | எளிய தொடர்களில் கருத்தை வெளிப்படுத்துவர்.<br>(*வகுப்புநிலைக்கான பயிற்சிகளைச் செய்வர்.*) |

**கற்றல் இலக்கு 5**

- **பிழையின்றி உரிய உணர்வு வெளிப்பட சூழலுக்கு ஏற்ப, முறையாக, சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்திக் கருத்தை வெளிப்படுத்துதல்.**

| | திறன் | கற்றல் விளைவுகள் | |
|---|---|---|---|
| | | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு |
| சொற்களஞ்சியம், பயன்பாட்டு இலக்கணம் | 5.1<br>எளிய நடைமுறை இலக்கணம்/ மொழிக்கூறுகள் அறிந்து (நிறுத்தக்குறிகள் உட்பட) பிழையின்றிப் பேசுதல், எழுதுதல். | எழுத்துகளின் ஒலிப்பு அறிந்து சொற்களில் பயன்படுத்துவர். | எளிய இலக்கணக்கூறுகளைப் பிழையின்றிப் பயன்படுத்துவர். |

TNSCERT - DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | குறிப்பு– *மொழியைப் பிழையின்றிப் பயன்படுத்துதல் ஒன்றே நோக்கமாகும். நேரடி இலக்கணப் பெயர்களின் அறிமுகம், தொடக்க நிலையில் அளிக்கப்பட மாட்டாது.)* | ------ | *ஒருமை, பன்மை, பெயர்ச்சொல், வினைச்சொல், நிறுத்தக்குறி (முற்றுப்புள்ளி)* |
| **கற்றல் இலக்கு 6** | **விழுமியங்களையும் வாழ்வியல் திறன்களையும் உணர்ந்து பின்பற்றுதல்.** | | |
| | **திறன்** | **கற்றல் விளைவுகள்** | |
| | | **முதல் வகுப்பு** | **இரண்டாம் வகுப்பு** |
| | 6.1<br>கேட்ட, படித்த பகுதிகளில் உள்ள வாழ்வியல் திறன்கள், விழுமியங்கள், 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை அறிதல், நல்லதை ஏற்றல், சூழலுக்கு ஏற்பப் பின்பற்றுதல், பேச்சில் எழுத்தில் பயன்படுத்துதல். | விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள், 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை வினாக்கள், கலந்துரையாடல் மூலம் தெளிவு பெற்றுப் பின்பற்றுவர்.<br>(எ.கா. *வணக்கம், நன்றி சொல்லுதல், வரிசையைப் பின்பற்றுதல், பகிர்தல், நட்புணர்வு, பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் சமத்துவம் பேணுதல் .... போன்றவை)* | செயல்பாடுகள் மூலம் அறிந்த விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள், 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடி தெளிவு பெற்றுப் பின்பற்றுவர்; பிறரிடமும் பகிர்ந்துகொள்வர்.<br>***(எ.கா.** மற்றவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல், சிக்கல்களைத் தன்னளவில் தீர்த்தல், பிறர் மனம் புண்படாவண்ணம் கருத்தை வெளிப்படுத்துதல்,... போன்றவை)* |

**கலைகள்** – வரைதல், வண்ணம் தீட்டுதல், உருவங்களை உருவாக்குதல் (தாள், பஞ்சு, மண், மாவு, விதைகள், பொருள்கள்), கதை சொல்லுதல், ஒப்பித்தல், போலச் செய்தல், நடித்தல், (விரல் பொம்மைகள், முகமூடி, பொம்மலாட்டம்), பாடுதல் (நாட்டுப்புறப்பாட்டு, எளிய பாடல்கள்), ஆடுதல், விளையாடுதல் (விளையாட்டு, உடலியக்கச் செயல்கள்).... போன்றவை

**விழுமியங்கள்**- உதவி, பொறுமை, தன்னம்பிக்கை, பொறுப்புணர்வு, சுயகட்டுப்பாடு, ஒத்துழைப்பு, ஒற்றுமை...... போன்றவை.

**வாழ்வியல் திறன்கள்** - தன்முறை வரும்வரை காத்திருத்தல். பொருள்களைப் பாதுகாத்தல், உண்மை பேசுதல், மறுத்தல், தகவல்களின் நன்மை தீமை அறிதல், தன்னை அறிந்து ஏற்றுக்கொள்ளுதல் (உடல் தோற்றம் – உயரம், நிறம், எடை போன்றவை), சுயஒழுங்கு, தன் பாதுகாப்பு, குறியீடுகள் அறிந்து பயன்படுத்தல் (கழிவறை போன்றவை) தன் தேவையைக் கேட்டுப் பெறுதல்.... போன்றவை.

குழந்தைகளுக்குத் தேவையான மேற்கண்ட பின்பற்றத்தக்க விழுமியங்கள், வாழ்வியல் திறன்களுள் பொருத்தமானவை வயது, வகுப்புநிலைக்கேற்றவாறு கதை, படக்கதை, பாடல், செய்யுள், உரையாடல், நிகழ்வு, உரைப்பகுதிகள் வாயிலாகச் சிந்தித்தும் பகுத்தறிந்தும் பாதுகாப்புடன், விழிப்புணர்வுடன் செயல்படுத்தும் நோக்கில் பயிற்சிச் செயல்பாடுகளாகவும் வகுப்பறைச் செயல்பாடுகளாகவும் அளிக்கப்படும்.

TNSCERT - DRAFT SYLLABUS

**தமிழ்நாடு கலைத்திட்ட வடிவமைப்பு 2025**

**பரிந்துரைக்கப்பட்ட வரைவுப் பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகள்**

**வகுப்பு – 1-5 – தமிழ்**

| திறன் பகுதி | திறன் | கற்றல் விளைவுகள் | | |
|---|---|---|---|---|
| | | **மூன்றாம் வகுப்பு** | **நான்காம் வகுப்பு** | **ஐந்தாம் வகுப்பு** |
| **கற்றல் இலக்கு 1– கற்றலுக்கு முன் ஆயத்தம் பெறுதல் (நுண்தசைப் பயிற்சி, உடலியக்கச் செயல்கள், பார்த்தல், கேட்டல், உணர்தல்)** | | | | |
| **முன் ஆயத்தம்** | 1.1<br>கருத்தை வெளிப்படுத்துவதற்கான **முன் ஆயத்தம்** பெறுதல் | குழந்தைகள்,<br>பாடல், கதைகளைக் கேட்டும் பாடியும் கற்றலுக்கு ஆயத்தம் பெறுவர். அறிந்த எழுத்துகள், சொற்களை நினைவுகூர்ந்து கற்றலுக்கு ஆயத்தமாவர். (*குறுக்கெழுத்துக் கட்டங்களைச் சொற்களால் நிரப்புதல்*) | குழந்தைகள்,<br>பாடல், கதை, நிகழ்வுகளைக் கூறியும் கலந்துரையாடியும் அறிந்த எழுத்துகள், சொற்கள், தொடர்களை நினைவு கூர்ந்தும் கற்றலுக்கு ஆயத்தமாவர். தொடருக்கு ஏற்ற படம் வரைவர். *(படங்களுக்கு ஏற்ற தொடர்கள், பழமொழிகள், புதிர்கள் எழுதுதல்)* | குழந்தைகள்,<br>பாடல், கதை, நிகழ்வுகள் குறித்துப் பேசியும் கலந்துரையாடியும் அறிந்த எழுத்துகளைச் சொற்களில், தொடர்களில், பத்திகளில் படித்து நினைவு கூர்ந்து கற்றலுக்கு ஆயத்தமாவர். (*தொடர் படங்களுக்கு ஏற்ற கதையை உருவாக்குதல்*) |
| **கற்றல் இலக்கு 2– சூழலுக்கு ஏற்ப இயல்பாகவும் சரளமாகவும் மொழியைப் புரிந்து பயன்படுத்துதல். (கேட்டல், பேசுதல்)** | | | | |
| **கேட்டல், பேசுதல்** | 2.1<br>பாடலைக் கேட்டுப் பாடுதல், நீட்டித்தல், உருவாக்குதல். | எளிய பாடல்களைக் கேட்டுச் சுவைப்பர். (ஊடகம், வாய்மொழி வாயிலாக) புரிந்து கொண்டு பாடுவர். பாடலின் கருத்தைச் சொந்தநடையில் வெளிப்படுத்துவர். பாடலின் அமைப்பிற்கேற்ப இறுதிப் பகுதியை உருவாக்கிப் பாடுவர். (*வாய்மொழி+ எழுத்து*) | எளிய/ கருத்துள்ள பாடல்களைக் கேட்டுச் சுவைப்பர். (ஊடகம், வாய்மொழி வாயிலாக) புரிந்து கொண்டு பாடுவர். பாடலின் கருத்தைச் சொந்த நடையில் வெளிப்படுத்துவர். பாடலின் ஓசை அமைப்பைப் புரிந்துகொண்டு அதுபோல வேறு பாடலை உருவாக்கிப் பாடுவர். *(வாய்மொழி+ எழுத்து)* | எளிய/ கருத்துள்ள விழிப்புணர்வுப் பாடல்களைக் கேட்டுச் சுவைப்பர். (ஊடகம், வாய்மொழி வாயிலாக) புரிந்து கொண்டு பாடுவர். பாடலின் கருத்தைச் சொந்த நடையில் வெளிப்படுத்துவர். கொடுக்கப்பட்ட தலைப்பு /படத்திற்கேற்ப பாடல் உருவாக்கிப் பாடுவர். *(வாய்மொழி+ எழுத்து)* |
| | 2.2<br>சொந்தநடையில் **உணர்வு வெளிப்படப்** பேசுதல். தாமே உருவாக்கிக் கூறுதல். | எளிய கதை, புதிர்க்கதைகளைக் கூறக்கேட்டும் படிக்கக்கேட்டும் புரிந்துகொண்டு கதைமாந்தர், கதைக்கருத்து, கதைக்களம் போன்றவற்றை முழுமையாகவும் கோவையாகவும் சொந்த மொழிநடையில் கூறுவர். கேட்ட கதைகளைத் தாங்கள் விரும்பும்வகையில் நடித்துக்காட்டுவர். | சிந்தனை, கற்பனையைத் தூண்டும் எளிய கதைகளைக் கூறக்கேட்டும் படிக்கக் கேட்டும் படித்தும் புரிந்துகொண்டு சொந்த மொழிநடையில் முழுமையாக, தெளிவாகக் கோவையாகக் கூறுவர். குறிப்புகளைக் கொண்டு கதையை உருவாக்கிச் சொந்த மொழிநடையில் கூறுவர். விடுபட்ட கதைப்பகுதியை நிறைவு செய்வர். கதைகளைக் குழுவாக இணைந்து நடித்துக்காட்டுவர். | சிந்தனை, கற்பனையைத் தூண்டும் மற்றும் துப்பறியும் கதைகளைக் கேட்டும் படித்தும் புரிந்துகொண்டு சொந்த மொழிநடையில் முழுமையாக, தெளிவாக, கோவையாக உரிய உணர்வுகளுக்கு ஏற்ப விவரித்துக் கூறுவர். தலைப்பு, மையக்கருத்தைக் கொண்டு கதையை உருவாக்கிச் சொந்த மொழிநடையில் கூறுவர். ஆளுக்கொரு தொடரைக் கூறிக் கதையை உருவாக்குவர். கதைகளை உருவாக்கித் தனிநடிப்பாக, குறுநாடகமாக வெளிப்படுத்துவர். |

TNSCERT - DRAFT SYLLABUS

| | | | | |
|---|---|---|---|---|
| | 2.3<br>கேட்டும் பார்த்தும் புரிந்துகொள்ளுதல், பயன்படுத்துதல். | பல்வேறு வகையான கேட்டல் பகுதிகளைப் புரிந்துகொண்டு செயல்படுவர். பிறருக்குப் புரியும்வகையில் எளியவடிவில் வெளிப்படுத்துவர்.<br>*(வாய்மொழி வழிகாட்டல், அறிவிப்பு, விளையாட்டு விதிமுறைகள், வருணித்தல்)*<br>எ.கா.<br>தோட்டம், பூங்கா, கடல் போன்றவை பற்றி விவரித்தல், வருணித்தல்.<br>*(சின்னஞ்சிறிய சிப்பிகள், தவழ்ந்து வரும் அலைகள், நீலக்கடல்)* | பல்வேறு வகையான கேட்டல் பகுதிகளைப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றுவர். பிறருக்குப் புரியும் வகையில் தெளிவாக அறிவுறுத்தல்களை வழங்குவர்; வருணித்துப் பேசுவர். *(வாய்மொழி வழிகாட்டல், பேருந்து, தொடர்வண்டி, விமானநிலையம் போன்ற பொது இடங்களில் வழங்கப்படும் அறிவுறுத்தல் மற்றும் அறிவிப்புகள், விளையாட்டு விதிமுறைகள், இடம் மற்றும் நிகழ்வுகளை விவரித்தல்.)*<br>எ.கா.<br>• நுழைவுச்சீட்டு அறைஎண் 5இல் வழங்கப்படும்.<br>• சிறார் பகுதி முதல்தளத்தில் உள்ளது. | பல்வேறு வகையான கேட்டல் பகுதிகளைப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றுவர். பிறருக்குப் புரியும் வகையில் சூழலுக்கும் வடிவத்திற்கும் (விளம்பரங்கள், நேரடி வருணனைகள். அடுப்பில்லா, புகையில்லா சமையல்களின் குறிப்புகள் போன்றவை) ஏற்ப அறிவுறுத்தல்களை வழங்குவர்; தெளிவாகப் பேசுவர்.<br>*(வாய்மொழி வழிகாட்டல், அறிவிப்பு, விளையாட்டு விதிமுறைகள், இடம், நிகழ்வுகளை வருணித்தல், விளம்பரங்கள், நேரடி வருணனைகள், நேர்காணல், விவரிப்புகள்)*<br>( எ.கா.) பள்ளி நிகழ்வினைத் தொகுத்து வழங்குதல். |
| | 2.4<br>கேட்டுப் புரிந்துகொண்டு **எதிர்வினையாற்றுதல், பங்கேற்றல்.** | உரையாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர். பிறர் கருத்தைச் செவிமடுத்துக் கேட்பர்; உரையாடல், கலந்துரையாடலில் பங்கேற்றுத் தன் கருத்தைப் பொருத்தமாக எடுத்துரைப்பர். | உரையாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர். பிறர் கருத்தைச் செவிமடுத்துக் கேட்பர்; உரையாடல், கலந்துரையாடலில் பங்கேற்றுத் தனது அனுபவங்களைத் தொடர்புபடுத்தித் தன் கருத்தை எடுத்துரைப்பர். | உரையாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர். பிறர் கருத்தைச் செவிமடுத்துக் கேட்பர்; உரையாடல், கலந்துரையாடலில் பங்கேற்றுத் தனது அனுபவங்களைத் தொடர்புபடுத்தித் தரவுகளுடன் தன் கருத்தை எடுத்துரைப்பர்; நிலைநாட்டுவர். |
| | 2.5<br>தலைப்பு சார்ந்து பேசுதல். | சுற்றுப்புறச் சூழலில் உள்ளவை குறித்து ஒரு தலைப்பு சார்ந்து சொந்த மொழிநடையில் பேசுவர். | தலைப்பு சார்ந்து உடல் அசைவுகளுடன் தெளிவாக, முறையாகப் பேசுவர். | தலைப்பு சார்ந்து எழுத்துத் தமிழில் கருத்துச் செறிவுடன் எடுத்துக்காட்டுகளுடன் பேசுவர். |
| | 2.6<br>வினாக்களுக்கு விடை கூறுதல், வினா கேட்டல். | வினாக்களைப் புரிந்துகொண்டு முழுமையான தொடரில் விடை கூறுவர். வினாச் சொற்களை அறிந்து படம் / கொடுக்கப்பட்ட பகுதிகளுக்கேற்ப வினா உருவாக்கிக் கேட்பர். | பல்வேறு வகையான வினாக்களைப் புரிந்துகொண்டு விடை கூறுவர். கொடுக்கப்பட்ட பகுதியிலிருந்து நேரடி / மறைமுகமான விடைகளை ஊகித்தும் சுருக்கமாகக் கூறுவர். கொடுக்கப்பட்ட பகுதியிலிருந்து நேரடி வினாக்களை உருவாக்கிக் கேட்பர். | பல்வேறு வகையான வினாக்களைக் கேட்டுப் புரிந்துகொண்டு விடை கூறுவர். கொடுக்கப்பட்ட பகுதி தொடர்பாக ஒப்பிட்டும் நேரடி / மறைமுக விடைகளை ஊகித்தும் விரிவாகக் கூறுவர். கொடுக்கப்பட்ட பகுதியிலிருந்து வினா உருவாக்கிக் கேட்பர். ஊகித்து விடையளிக்கக் கூடிய வகையிலான வினாக்களை உருவாக்கிக் கேட்பர். |

**கற்றல் இலக்கு 3**

- **படித்தலுக்கு ஆயத்தம் பெறுதல்; சரளமாகவும் பொருள் புரிந்தும் படித்தல்.**

| | திறன் | கற்றல் விளைவுகள் | | |
|---|---|---|---|---|
| | | **மூன்றாம் வகுப்பு** | **நான்காம் வகுப்பு** | **ஐந்தாம் வகுப்பு** |
| **படித்தல்** | 3.1<br>படித்தலுக்கான ஆயத்தம் பெறுதல். | முன்பு கற்ற எழுத்துகளைச் சொற்களிலும் தொடர்களிலும் நினைவுகூர்ந்து படிப்பர். | முன்பு கற்ற எழுத்துகளைச் சொற்களிலும் தொடர்களிலும் நினைவுகூர்ந்து பொருள்புரிந்து விரைவாகப் படிப்பர். | முன்பு கற்ற எழுத்துகளைச் சொற்களிலும் தொடர்களிலும் நினைவுகூர்ந்து பொருள்புரிந்து விரைவாக, சரளமாகப் படிப்பர். |

TNSCERT - DRAFT SYLLABUS

| | | | | |
|---|---|---|---|---|
| | 3.2. எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலித்தல், பயன்படுத்துதல். | தமிழ் எழுத்துகளை அடையாளம் கண்டு வண்ணமிட்டு ஒலிப்பர். குறில், நெடில் அறிந்து படிப்பர்.<br>பிறமொழி ஒலிப்புகளுக்கான எழுத்துகளை வேறுபாடு உணர்ந்து படிப்பர். | தமிழ் எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலிப்பர். குறில், நெடில், மயங்கொலி வேறுபாடு அறிந்து படிப்பர். பயன்படுத்துவர். பிறமொழி ஒலிப்புகளுக்கான எழுத்துகளை உரிய இடங்களில் பயன்படுத்துவர். வண்ணமிட்டு அடையாளப்படுத்துவர். | தமிழ் எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலிப்பர். குறில், நெடில், மயங்கொலி வேறுபாடுகளின் பொருள் உணர்ந்து பிழையின்றிப் படிப்பர். எழுத்துகளைக் கொண்டு உருவங்களை வரைந்து வண்ணமிடுவர். பிறமொழி ஒலிப்புகளுக்கான எழுத்துகளைப் பிழையின்றியும் உரிய ஒலிப்புடனும் பயன்படுத்துவர். |
| | 3.3. படித்துப் புரிந்துகொள்ளுதல். | கொடுக்கப்பட்ட சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகளைச் சரியான உச்சரிப்புடன் பொருள்புரிந்து படிப்பர்: விரைவாகப் படிப்பர்.<br>*(அன்றாட வாழ்வியல் தொடர்பான சொற்கள், தொடர்கள், சிறு பத்தி (50 சொற்கள்), சிறிய கதை, உரையாடல், எளிய பாடல், செய்யுள், விளம்பரம், அறிவிப்பு, விலைப்பட்டியல், வருணனை, விடுகதை)* | கொடுக்கப்பட்ட சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகளைச் சரியான உச்சரிப்புடன் தங்குதடையின்றிப் பொருள்புரிந்து குரல் ஏற்ற இறக்கங்களுடன் குறிப்பிட்ட நேரத்திற்குள் படிப்பர்.<br>*(அன்றாட வாழ்வியல் தொடர்பான சொற்கள், தொடர்கள், புலனச்செய்தி, முழக்கத்தொடர், கடிதம், செய்தித்தாள், ஒளிரும் பலகை, நகைச்சுவைத் துணுக்குகள், விடுகதைகள், வருணனை, விவரிப்புகள், கதை, உரைநடை, உரையாடல், செய்யுள், நாடகம், பாடல், எளிய கட்டுரைகள்)* | கொடுக்கப்பட்ட சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகளைச் சரியான உச்சரிப்புடன் தங்குதடையின்றிப் பொருள்புரிந்து உரிய பாவனைகளுடன் குறிப்பிட்ட நேரத்திற்குள் சரளமாகப் படிப்பர்.<br>*(அன்றாட வாழ்வியல் தொடர்பான சொற்கள், தொடர்கள், புலனச்செய்தி, முழக்கத்தொடர், கடிதம், செய்தித்தாள், ஒளிரும் பலகை, நகைச்சுவைத் துணுக்குகள், விடுகதைகள், வருணனை, விவரிப்புகள், கதை, உரைநடை, உரையாடல், செய்யுள், நாடகம், பாடல், சிறு கட்டுரைகள். நேரடி வருணனை, நேர்காணல்)* |
| | 3.4 நிறுத்தக் குறிகளுக்கு ஏற்ப **ஏற்ற இறக்கங்களுடன்** உரைப்பகுதியைப் படித்தல்.) | முற்றுப்புள்ளி, வினாக்குறிகளுக்கு ஏற்பப் படிப்பர். புரிந்துகொள்வர். | முற்றுப்புள்ளி, வினாக்குறி, உணர்ச்சிக்குறி, காற்புள்ளிகளுக்கு ஏற்பப் படிப்பர். புரிந்துகொள்வர். | நிறுத்தக் குறிகளுக்கு ஏற்பப் படிப்பர். புரிந்துகொள்வர். (முற்றுப்புள்ளி, வினாக்குறி, காற்புள்ளி. உணர்ச்சிக்குறி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி) |
| | 3.5 விரும்பும் நூல்களைத் தேடிப் படித்தல்: **சுவைபட எடுத்துக்கூறுதல்,** | விரும்பும் நூல்களைத் தேடிப் படிப்பர்: பிடித்த பகுதியைச் சொந்த நடையில் கூறுவர்.<br>*சிறுவர் இதழ்கள்* | விரும்பும் நூல்களைத் தேடிப் படிப்பர்: அது குறித்த தம் கருத்தைச் சுவைபட எடுத்துக் கூறுவர்.<br>*சிறுவர் இதழ்கள், சிறுவர் நூல்கள்* | விரும்பும் நூல்களைத் தேடிப் படிப்பர். அது குறித்த தம் கருத்தை அனுபவத்தோடு சேர்த்துச் சுவைபட எடுத்துக் கூறுவர்.<br>*சிறுவர் இதழ்கள், சிறுவர் நூல்கள், நூலகப் புத்தகங்கள்* |

TNSCERT - DRAFT SYLLABUS

**கற்றல் இலக்கு 4**

- **எழுதுவதற்கு ஆயத்தம் பெறுதல்: இயல்பாகவும் சரளமாகவும் சொந்த நடையிலும் எழுதுதல்.**

| | திறன் | கற்றல் விளைவுகள் | | |
|---|---|---|---|---|
| | | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
| எழுதுதல் | 4.1<br>எழுதும் முறை அறிந்து வரியொற்றி, பார்த்தும் கேட்டும் எழுதுதல். | வகுப்பு நிலைக்கேற்ற சொற்கள், தொடர்களைப் பிழையின்றி எழுதுவர். சொல்லக்கேட்டு எழுதுவர். | வகுப்பு நிலைக்கேற்ற சொற்கள், தொடர்கள், சிறுபத்திகளைப் பிழையின்றி எழுதுவர். சொல்லக்கேட்டு எழுதுவர். தாம் எழுதுவதைக் குழுவாக மதிப்பீடு செய்து கொள்வர். | வகுப்பு நிலைக்கேற்ற சொற்கள், தொடர்கள், சிறுபத்தி, உரைப்பகுதிகளைப் பிழையின்றி எழுதுவர்: சொல்லக்கேட்டு எழுதுவர். தாம் எழுதுவதைத் தாமே மதிப்பீடு செய்து கொள்வர். |
| | 4.2<br>பார்த்த, கேட்ட, படித்த பகுதிகளின் பொருள்புரிந்து விடை எழுதுதல். | கொடுக்கப்பட்ட பகுதி / பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு நேரடியாக விடை எழுதுவர். | உரைநடை, உரையாடல், பாடல் கதைகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு நேரடியாகவும் சுருக்கியும் விரித்தும் சொந்த நடையில் விடை எழுதுவர். | உரைநடை, உரையாடல், பாடல், கதைகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு நேரடியாகவும் சுருக்கியும் விரித்தும் தொகுத்தும் சொந்தநடையில் விடை எழுதுவர். |
| | 4.3<br>சொந்தக் கருத்தைப் பல்வேறு வடிவங்களில் **விவரித்து**, **வருணித்து**, **ஒப்பிட்டு** படைப்பாற்றலுடன் எழுதுதல். | பாடல், உரையாடல்களின் தொடர்ச்சியை எளிய நடையில் எழுதுவர். படம்/ பொருளைப் பார்த்து வருணனைச் சொற்களை இணைத்தும் விடுபட்டதைத் தொடர்ந்தும் எழுதுவர். எளிய கதைகளை உருவாக்குவர். எளிய கோட்டுப் படங்களுக்கு ஏற்ற உரையாடலை எழுதுவர். பாதி வரைந்த கோட்டுப்படங்களை நிறைவு செய்வர். | குறிப்பிட்ட வடிவத்தில் சொந்த நடையில் பொருள் புரிந்து வருணித்தும் ஒப்பிட்டும் பொருத்தமான நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தி எழுதுவர். விருப்பப்படி படக்கதைகளை உருவாக்குவர். படங்களுடன் பொருத்துவர்.<br>(பாடல், கதை, உரையாடல், முழக்கத்தொடர், சிறு கடிதம், சிறு கட்டுரை) | குறிப்பிட்ட வடிவத்தில் சொந்த நடையில் பொருள் புரிந்து வருணித்தும் ஒப்பிட்டும் நிறுத்தக்குறிகளை ஏற்ற இடங்களில் பயன்படுத்திப் படைப்பாற்றலுடன் எழுதுவர். தலைப்புக்கேற்ப கதைகளைப் படங்களுடன் உருவாக்கி எழுதுவர். கட்டுரைக்குப் பொருத்தமான படங்களைத் தேடித் தொகுப்பர்.<br>(பாடல், கதை, உரையாடல், முழக்கத்தொடர், கடிதம், நாள்குறிப்பு, நிகழ்ச்சிநிரல், கட்டுரை) |

**கற்றல் இலக்கு 5**

- **பிழையின்றி உரிய உணர்வு வெளிப்பட சூழலுக்கு ஏற்ப, முறையாக, சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்திக் கருத்தை வெளிப்படுத்துதல்.**

| | திறன் | கற்றல் விளைவுகள் | | |
|---|---|---|---|---|
| | | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
| சொற்களஞ்சியம், பயன்பாட்டு இலக்கணம் | 5.1<br>எளிய நடைமுறை இலக்கணம்/ மொழிக்கூறுகள் அறிந்து (நிறுத்தக்குறிகள் உட்பட) பிழையின்றிப் பேசுதல், எழுதுதல். | எளிய நடைமுறை இலக்கணம்/ மொழிக்கூறுகளை அறிந்து பிழையின்றிப் பயன்படுத்துவர். எழுத்து/ சொற்கள்/ மொழிக்கூறுகள் சார்ந்த விளையாட்டுகளில் ஈடுபடுவர். | எளிய நடைமுறை இலக்கணம்/ மொழிக்கூறுகளை அறிந்து பிழையின்றிப் பயன்படுத்துவர். எழுத்து/ சொற்கள்/ மொழிக்கூறுகள் சார்ந்த விளையாட்டுகளில் ஈடுபடுவர். சொல் விளையாட்டுகளை உருவாக்குவர். | எளிய நடைமுறை இலக்கணம்/ மொழிக்கூறுகளை அறிந்து பிழையின்றிப் பயன்படுத்துவர். மொழி விளையாட்டுகளில் விருப்பமுடன் ஈடுபடுவர். கையெழுத்து இதழ்களை உருவாக்குவர். |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | | |
|---|---|---|---|---|
| | ***குறிப்பு**– மொழியைப் பிழையின்றிப் பயன்படுத்துதல் ஒன்றே நோக்கமாகும். நேரடி இலக்கணப் பெயர்களின் அறிமுகம், தொடக்க நிலையில் அளிக்கப்பட மாட்டாது.* | *ஒருமை, பன்மை, எழுத்து வகைகள், பெயர்ச்சொல், வினைச்சொல், ஐம்பால், உயர்திணை, அ.:றிணை, பதிலிப்பெயர், பயன்பாட்டில் உள்ள பேச்சுவழக்குக்கு உரிய எழுத்து வழக்குச் சொற்கள், எதிர்ச்சொல், நிறுத்தக்குறிகள் (முற்றுப்புள்ளி, வினாக்குறி,)* | *ஒருமை, பன்மை, பெயர், வினை, பதிலிப் பெயர்கள், மரபுச் சொற்கள், இன எழுத்துகள், ஒரு சொல் பலபொருள், ஐம்பால், ஓரெழுத்து ஒருமொழி, சுட்டுப்பெயர், அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி, ஒரு, ஓர், சில, சிலர், பல, பலர் – போன்ற சொற்கள், பயன்பாட்டில் உள்ள பேச்சுவழக்குக்கு உரிய எழுத்து வழக்குச் சொற்கள், நிறுத்தக்குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, உணர்ச்சிக்குறி)* | *ஒருமை, பன்மை, பெயர், வினை, பதிலிப் பெயர்கள், மரபுச் சொற்கள், இணைப்புச் சொற்கள், முக்காலம், மூவிடம், எழுவாய், பயனிலை ,அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி மற்றும் பயன்பாட்டில் உள்ள பேச்சுவழக்குக்கு உரிய எழுத்து வழக்குச் சொற்கள், நிறுத்தக்குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, உணர்ச்சிக்குறி அரைப்புள்ளி, முக்காற்புள்ளி)* |

**கற்றல் இலக்கு 6**

- **விழுமியங்களையும் வாழ்வியல் திறன்களையும் உணர்ந்து பின்பற்றுதல்.**

| | திறன் | கற்றல் விளைவுகள் | | |
|---|---|---|---|---|
| | | **மூன்றாம் வகுப்பு** | **நான்காம் வகுப்பு** | **ஐந்தாம் வகுப்பு** |
| **தானே கற்றல்** | 6.1<br>கேட்ட, படித்த பகுதிகளில் உள்ள வாழ்வியல் திறன்கள், விழுமியங்கள், 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை அறிதல், நல்லதை ஏற்றல், சூழலுக்கு ஏற்பப் பின்பற்றுதல், பேச்சில் எழுத்தில் பயன்படுத்துதல். | அறிந்த விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள், 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள் குறித்த தம் கருத்துகளைக் கலந்துரையாடலில் வெளிப்படுத்துவர்; பின்பற்றுவர்.<br>(எ.கா. *எளிய விதிமுறைகள், கட்டளைகளைப் பின்பற்றுதல், சமத்துவம் பேணுதல் (பாலினம் – ஆண், பெண், வேலைகள்), தன்னை அறிதல்.... போன்றவை)* | படித்தறிந்த விழுமியங்கள், வாழ்வியல் திறன், 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள் குறித்துக் கலந்துரையாடி வினாக்கள் மூலம் தெளிவு பெற்றுப் பிறரிடம் பகிர்ந்துகொண்டு தாமும் பின்பற்றுவர்.<br>(எ.கா. *சிக்கலுக்குத் தன்னளவில் தீர்வு காணுதல், ஆக்கச் சிந்தனை, இணக்கமான உறவு, தன் பாதுகாப்பு .... போன்றவை)* | படித்துத் தெளிவு பெற்ற விழுமியங்கள், வாழ்வியல் திறன், 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள் குறித்துக் கலந்துரையாடுவர்; தம் கருத்தைச் சிந்தித்து வெளிப்படுத்துவர்; பின்பற்றுவர். பிறரையும் பின்பற்ற வலியுறுத்துவர்.<br>(எ.கா. *பிறரைக் கருத்தில் கொள்ளுதல், தன்மீது மதிப்பு கொள்ளுதல், பிறர்மீது குறை கூறாதிருத்தல், துணிவுடன் உண்மை கூறுதல்.... போன்றவை)* |

**கலைகள்** – காட்சிக் கலைகள் (ஓவியம் வரைதல், களிமண், மாவு, வழலைக்கட்டியில் சிற்பங்கள் செய்தல், நிழற்படங்கள் எடுத்தல்), நிகழ்த்து கலைகள் (பாடல் பாடுதல், நாடகம் நடித்தல், உரையாடல் நிகழ்த்துதல், தனிநடிப்பு, போலச் செய்தல், நாட்டுப்புற நடனங்கள்) இலக்கியக் கலைகள் (கதை, பாடல் எழுதுதல், உரையாடல் எழுதுதல்), கைவினைக் கலைகள் (தாள், பஞ்சு, மண், மாவில் பொம்மைகள் செய்தல், ஒப்பனைப் பொருள்கள் உருவாக்குதல்), மின்னூடகக் கலைகள் – (காணொலி, கேட்பொலி) .... போன்றவை.

**விழுமியங்கள்**- நட்பு, ஒற்றுமை, பொறுமை, மனிதநேயம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அன்பு, கருணை, தன்னம்பிக்கை, தன்மதிப்பு, நேர்மை ..... போன்றவை.

**வாழ்வியல் திறன்கள்** – எளிய விதிமுறைகளைப் பின்பற்றுதல், முடிவெடுத்தல், தமது எண்ணங்களைப் பிறரைப் புண்படுத்தாமல் வெளிப்படுத்துதல், நன்மை தீமையை வேறுபடுத்தி அறிதல், தன்னம்பிக்கை, சிக்கலுக்குத் தன்னளவில் தீர்வு காணுதல், பொறுப்புடன் செயல்படுதல்,.... போன்றவை.

குழந்தைகளுக்குத் தேவையான மேற்கண்ட பின்பற்றத்தக்க விழுமியங்கள், வாழ்வியல் திறன்களுள் பொருத்தமானவை வயது, வகுப்புநிலைக்கேற்றவாறு கதை, படக்கதை, பாடல், செய்யுள், உரையாடல், நிகழ்வு, உரைப்பகுதிகள், அறநூல் கருத்துகள் வாயிலாகச் சிந்தித்தும் பகுத்தறிந்தும் பாதுகாப்புடன், விழிப்புணர்வுடன் செயல்படும் நோக்கில் பயிற்சிச் செயல்பாடுகளாகவும் வகுப்பறைச் செயல்பாடுகளாகவும் அளிக்கப்படும்.

TNSCERT - DRAFT SYLLABUS

**கற்பித்தல் அணுகுமுறை:**

குழந்தைகளின் மொழித்திறன்கள், விழுமியங்கள் மற்றும் வாழ்வியல் திறன்களையும் மேம்படுத்திட ஆசிரியரால் பின்பற்றப்படும் வழிமுறைகளும் உத்திகளுமே கற்பித்தல் அணுகுமுறை. இது கற்றலில் குழந்தைகளின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்து பாடப்பொருளைப் புரிந்து பயன்படுத்தவும் படைப்பாற்றலில் வளர்ச்சி பெறவும் வழிவகுக்கும். கற்பித்தல் என்பது ஏற்கனவே பெற்ற அறிவை மேம்படுத்துவதே. வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் படம், படக்கதை, பாடல், கதைகள், மொழி விளையாட்டு, பொம்மலாட்டம், நாடகம், உடலியக்கச் செயல்பாடுகள் வாயிலாகக் கலந்துரையாடுதல், சிந்தித்தல், உற்றுநோக்கல், பேசுதல், விவாதித்தல், வினவுதல் போன்ற பல்வேறு வடிவங்களில் நடைமுறைப்படுத்தப்படும். குழந்தை மையக் கற்றல், விளையாட்டு முறைக் கற்றல், கதை நிகழ்வுகள்வழியாகக் கற்றல், செயல்பாடுகள்வழியாகக் கற்றல், நடிப்பு மற்றும் நாடகம்வழியாகக் கற்றல், நிகழ்வுகள் வாயிலாகக் கற்றல் (Case Studies), அனுபவங்கள்வழியாகக் கற்றல் போன்றவை வகுப்பிற்கு ஏற்ப, குழந்தைகளுக்கு ஏற்ப, பாடப்பகுதிக்கு ஏற்பத் தனியாகவும் இணையாகவும் குழுவாகவும் குழந்தைகள் கற்பதற்கு ஏற்றவகையில் அளிக்கப்படும். இதனால், குழந்தைகள் இயல்பான ஆர்வம், சிந்தனை, ஆராய்ச்சி மற்றும் அனுபவங்கள் வாயிலாக மொழியின் அடிப்படைத் திறன்களைப் பெறுவர். மேலும், இன்றைய குழந்தைகளுக்குத் தேவையான விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள் போன்றவை தமிழின் அறநூல்கள் வாயிலாக உணர்ந்து பயன்படுத்தும்வகையில் கற்பிக்கப்படும்.

**மதிப்பீட்டு உத்திகள்:**

குழந்தைகளின் கற்றல் நிலை, திறன்கள் மற்றும் புரிதலை அளவிடப் பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு உத்திகள் என்பன,

- கற்றலின் ஒரு பகுதியாகவும் கற்றலை மேம்படுத்துவதாகவும் கற்றலை அளவிடுவதாகவும் அமையும்.
- இயல்பாக, இலகுவாக, குழந்தை மையமாக, திறன் நோக்கில் நடைபெறும்.
- குழந்தைகளையும் ஆசிரியர்களையும் ஊக்கப்படுத்துவதாக அமையும்.
- ஒரே முறையில் இல்லாமல் மாறுபட்ட முறைகளில் குழந்தைகள் பெற்ற திறன்களை அளவிட வாய்ப்பளிக்கும்.

குறிப்பாக, தொடக்கநிலையில் குழந்தைகள், தனியாக /இணையாக/ குழுவாக மற்றும் தாமாக மதிப்பீடு செய்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அமையும்.

குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது தொடக்கக்கல்வி. அவ்வடித்தளமானது குழந்தைகள் விரும்பும்வகையில் அவர்களில் இருந்து தொடங்கி குடும்பம், சுற்றுப்புறம், சமூகம், பண்பாடு, விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள் என விரிந்து மொழியைச் சூழலுக்கு ஏற்பக் கையாளும் வகையில் தொடக்கநிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

TNSCERT - DRAFT SYLLABUS